முக்கிய வார்த்தைகள்:
தொழுகை
வெற்றி
அமைதி / சாந்தி

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**30 ஜனவரி 2026 / 11 ரஜப் ஹிஜிரி 1447**

# தொழுகை: வெற்றியும் மன அமைதியும் கிடைப்பதற்கான வணக்கமாகும்

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ. أُوصِي نَفْسِي وَإِيَّاكُمْ بِتَقْوَى ٱللَّهِ عَزَّ وَجَلَّ، فَقَدْ فَازَ ٱلْمُتَّقُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது தக்வா [பக்தியை] ஏற்படுத்திக் கொண்டு, அவனை எப்போதும் நினைவில் கொள்வோமாக! அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும் அல்லாஹ் தடைசெய்துள்ள விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வுக்கு நிறைவேற்ற வேண்டிய உரிமைகளை நிறைவேற்றுவோமாக. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, இம்மையிலும் மறுமையிலும் அருள்களையும் **வெற்றியையும்** நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே!**

நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், அன்றாடம் ஐந்து நேரங்களில் தொழுக வேண்டுமெனக் கட்டளையிடப்பட்டுள்ளோம். இதனைக் கவனத்தில் கொண்டு நாம் சிந்திக்கும் போது, ஒவ்வொரு **தொழுகைக்காக** நாம் நேரத்தை ஒதுக்குவதானது, நமது உற்பத்தித்திறனுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதைப் போன்றுள்ளதல்லவா?

அநேகமாக, இது போன்ற சிந்தனைகள் நமது சில தனிநபர்களின் சிந்தனைகளில் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. மேன்மையை அடைவதற்கும் சாதனைகளைப் படைப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் தற்கால சமுதாயத்தில், நேரம் என்பது மிக முக்கியமான வளமாக உள்ளது. எனினும், முஸ்லிம்களான நம்மைப் பொருத்த வரை, **தொழுகையானது** வெற்றியை அடைவதற்குத் **தடையாக** உள்ளது என நாம் கருதுவது முறையல்ல. மாறாக, **தொழுகையானது** ஆன்மாக்களைப் பலப்படுத்துவதாக இருக்கின்றது; தனிநபர்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் மேன்மையையும் **வெற்றியையும்** அடைவதற்கு உந்து சக்தியாகவும் தூண்டுகோலாகவும் அது உள்ளது.

நாம் தெரிவிக்கின்ற இக்கருத்துக்கு ஆதாரம் என்ன? என நாம் கேட்கலாம்; திருக்குர்ஆனின் "அல்-மு::மினூன்" எனும் அத்தியாயத்தின் பின்வரும் முதல் இரண்டு வசனங்களில் நாம் சிந்தனை செய்ய வேண்டும்; அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகின்றான்:

قَدْ أَفْلَحَ الْمُؤْمِنُونَ ۝١ الَّذِينَ هُمْ فِي صَلَاتِهِمْ خَاشِعُونَ

பொருள்: நிச்சயமாக, ஈமான் கொண்டவர்கள் [ஓரிறை நம்பிக்கைக் கொண்டவர்கள்] **வெற்றி பெற்று விட்டனர்;** அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் **தொழுகையில்** உள்ளச்சத்தோடு இருப்பார்கள். [அதாவது, **தொழுகைகளை** உள்ளச்சத்தோடு தொழுவார்கள்].

ரசூலுல்லாஹி[ஸல்] அவர்களும் நவின்றுள்ளார்கள்:
மறுமைத் தீர்ப்பு நாளின் போது, ஒரு அடியார் கேட்கப்படும் கேள்விகளில் முதலாவது கேள்வி, அவரது **தொழுகையைப்** பற்றித் தான்; அவரது **தொழுகை** சரியாக இருந்தால் அவர் **வெற்றி பெற்றவராகவும்** வளமிக்கவராகவும் ஆகி விடுவார். அவரது **தொழுகை** சரியாக இல்லையென்றால் அவர் தோல்வியடைந்து விடுவார்; அனைத்து நலன்களையும் இழந்து விடுவார். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**
உண்மையில், நமது **தொழுகையானது**, இஸ்லாம் மற்றும் நமது ஓரிறை நம்பிக்கையின் முக்கியத் தூணாக உள்ளது. நமது அன்றாட பழக்க வழக்கத்துக்காக அதனைத் தவிர்ப்பது கூடாது. மார்க்கத்தின் முக்கியக் கடமையாக உள்ள அதனை, பாதி மனதுடன் நிறைவேற்றுவதோ, கடமையை நிறைவேற்றுகிறேன் எனும் எண்ணத்தில் மட்டும் நிறைவேற்றுவதோ கூடாது. **தொழுகையானது**, மனிதகுலத்துக்கு மிகப் பெரிய அளவில் நன்மையை ஏற்படுத்தும் கடமை என்பதை நாம் அறிவது அவசியமாகும்.

இன்றைய "குத்பா" பிரசங்கமானது, **தொழுகை** சம்பந்தமாக இரண்டு முக்கிய செய்திகளை உங்களுக்கு வழங்க உள்ளது. அவை நமக்கு மிகச் சிறந்த வழிகாட்டுதலாக அமையும் இன்ஷாஅல்லாஹ்:

**முதலாவதாக: தொழுகையானது, வெற்றியை அடைவதற்கு முக்கியக் காரணமாக உள்ளதே தவிர, வெற்றியை அடைவதற்குத் தடையாக இருப்பதல்ல.**

**வெற்றி** என்பது வெறும் பொருள் சார்ந்த அளவுகோலால் அளவிடப்படும் விஷயமல்ல எனத் **தொழுகை** நமக்கு நினைவூட்டுகிறது.

நாம் முஸ்லிம்கள் எனும் ரீதியில், நமது உலக சம்பந்தமான விஷயங்களான, வாழ்வாதாரத்தைத் தேடுதல், நமது குடும்பத்தாருக்கு

உதவுதல், பொருள்மிக்க, நலமான வாழ்க்கையை அமைத்தல் ஆகியவற்றிலும் ஈடுபடுமாறு நாம் ஆர்வமூட்டப்பட்டுள்ளோம். எனினும், வாழ்க்கையில் சவால்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாத விஷயமாகும். எவ்வாறு கஷ்டம் என்பது நமது வாழ்க்கையில் ஒரு சோதனையோ அவ்வாறே, எளிதான, சுகமான நிலையும் ஒரு சோதனையாகும்.

**தொழுகையானது**, ஒரு அடியாரை அவரது இறைவனுடன் நேரடியானத் தொடர்பை ஏற்படுத்துவதாகும். நாம் நமது அனைத்து விவகாரங்களிலும் அல்லாஹ்வையேச் சார்ந்திருக்கின்றோம்; நமக்கு கஷ்டம் ஏற்படும் போது அவனது உதவியை நாடுகிறோம்; நமக்கு எளிதான மற்றும் வளமான வாழ்க்கை வழங்கப்படும் போது, அல்லாஹ்வின் வழிகாட்டுதலை நாடுகிறோம்; மேலும் நமது **தொழுகைகளின்** மூலம் அல்லாஹ்வின் பாதுகாப்பைத் தேடுகிறோம்.

**இரண்டாவதாக: தொழுகையானது நமது மன அமைதியை அதிகப்படுத்தி, அதனை வளர்ப்பதாகும்.**

அன்பிற்குரிய சகோதரர்களே! நாம் நமது அன்றாட வாழ்க்கையில் செய்யக் கூடிய செயல்களெல்லாம், வெளிப்புறத் தேவைகளின் காரணமாகவே செய்கின்றோம். உதாரணமாக, ஒரு மாணவர் ஆர்வத்துடன் படிக்கின்றார்; காரணம், சூழ்நிலைகள் கல்வியைத் தேடுமாறு அவரை நிர்ப்பந்திக்கின்றன. அவரது சாதனையோ தேர்வுகளால் அளவிடப்படுகிறது. ஆனால், **தொழுகையானது** வித்தியாசமானதாகும்; தொழுகையானது பெரும்பாலும் தனிப்பட்ட விருப்பத்தால் நிறைவேற்றப்படுகிறது. வெளிப்புறத் தேவைகளின் காரணமாக நிறைவேற்றப்படுவதில்லை. அல்லாஹ்வின் மதிப்புகளைப் பெறுவதற்காக மட்டுமே **தொழுகை** நிறைவேற்றப்படுகிறது.

நாம் செய்யும் ஒவ்வொரு முயற்சியையும் நம்மைச் சுற்றியுள்ளவர்கள் பார்க்கின்றார்களோ இல்லையோ, அல்லாஹ் நமது முயற்சிகளைப் பார்த்து அவற்றுக்கு மதிப்புகளை வழங்குவதாக அல்லாஹ் சுப்ஹானஹூ வதஆலா வாக்குறுதி அளிக்கின்றான். ஒரு முஸ்லிமைப் பொருத்த வரை, **தொழுகை**

அவருக்கு மன அமைதியை வழங்குகிறது; அம்மாதிரியான அமைதியை அவர் மற்ற மூலங்களில் அடைந்து கொள்ள முடியாது.

**அருள்மிக்க ஜமாஅத்தார்களே**!

அநேகமாக, **தொழுகையின்** மூலம் கிடைக்கும் இவ்விதமான அமைதியைப் பற்றித்தான், செய்யிதினா பிலால் [ரலி] அவர்களுக்கு, இறைத்தூதர்[ஸல்] அவர்கள், தனது பின்வரும் கூற்றின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளார்கள்:

*"பிலாலே! **தொழுகைக்கான** "இகாமத்" தைக் கூறுவீராக! **தொழுகையின்** மூலம் எங்களுக்கு நலனை ஏற்படுத்துவீராக!"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அபூதாவூத் ரஹ்]

தமது **தொழுகைகளை** முறைப்படித் தொழுவதில் நிலைத்து நிற்கின்ற அடியார்களில் ஒருவராக நம்மனைவரையும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா ஆக்குவானாக! அவர்கள் மூலம் இம்மையிலும் மறுமையிலும் **வெற்றியை** நமக்கு வழங்குவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

<u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلْمُؤْمِنِينَ وَالْمُؤْمِنَاتِ، وَالْمُسْلِمِينَ وَالْمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنْهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِيْنَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنْيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.